### மேற்கு வங்க முன்னாள் முதலமைச்சர் புத்ததேவ் பட்டாச்சார்ஜீ மறைவு!

# "புத்ததேவின் தலைமைத்துவம் - வருங்காலத் தலைமுறைகளுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும்"!

## மறைவுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக. 9-**

**மேற்கு வங்கத்தின் முன்னாள் முதலமைச்சர் புத்ததேவ் பட்டாச்சார்ஜீ அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் "புத்ததேவ் பட்டாச்சார்ஜீ அவர்களின் தலைமைத்துவமும், மக்கள் மீதான உறுதிப்பாடும் வருங்காலத் தலைமுறைகளுக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

வலைதளத்தில் முதல்வர் அவர்கள் வெளியிட்ட இரங்கல் செய்தி வருமாறு:-



இடதுசாரி இயக்கத்தின் முதுபெருந்தலைவரும், மேற்கு வங்க மாநில முன்னாள் முதலமைச்சருமான தோழர் புத்ததேவ் பட்டாச்சார்ஜீ அவர்களது மறைவுச் செய்தி அறிந்து மிகவும் வருத்தமடைந்தேன். தனது மாநிலத்துக்கும் நாட்டுக்கும் அவர் காட்டிய மாறாத அர்ப்பணிப்பும் சேவையும் என்றும் நினைவு கூரப்படும்.

ஓர் உறுதியான மார்க்சியவாதியாக, சமத்துவச் சமுதாயத்தை வளர்த்தெடுக்கவும் விளிம்புநிலை மக்களின் நலனுக்காகவும் சமூக நீதிக்காகக் குரல் கொடுக்கவும் தனது வாழ்வை அவர் அர்ப்பணித் துக் கொண்டார்.

அவரது தலைமைத்துவமும், மக்கள் மீதான உறுதிப்பாடும் வருங்காலத் தலைமுறைகளுக்கும் தொடர்ந்து ஊக்கமளிக்கும். அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களுக்கும் இவ்வேளையில் எனது இதயப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழருக்குச் செவ்வணக்கம்!

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருக்கமுடன் குறிப்பிட்டுள்ளார்.

## சிவகங்கையில் கலைஞர் நினைவு நாள்!

சிவகங்கை, ஆக.9 -

கலைஞர் 6வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, நகர திமுக சார்பில் அண்ணா சிலை முன்பு, கலைஞர் திருவுருவப் படத்திற்கு நகரமன்றத் தலைவர் மற்றும் நகர கழக செயலாளர் சி.எம். துரை ஆனந்த் தலைமையில் மற்றும் மாவட்ட துணை செயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்து முன்னிலையில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இதில் கழக முன்னணி தோழர்கள் கலந்து கொண்டு திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.





சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்குப் பகுதி, 118 வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தயாநிதி மாறன் எம்.பி, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை ஆகியோர் ஆலோசனைப்படி, வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் தலைமையில் கிளைக் கழக மன்றத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 118 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மல்லிகா யுவராஜ், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### அனைவரின் கோரிக்கையினையேற்று ஒன்றிய அரசு ரத்து செய்ய வேண்டும்!

# மருத்துவக் காப்பீட்டுக்கு 18 % ஜி.எஸ்.டி. போடுவது ஏற்புடையதல்ல!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஆக. 9 -

மருத்துவக் காப்பீட்டுக்கு 18 சதவீத ஜி.எஸ்.டி. வரி போடுவது ஏற்புடையதல்ல என்று 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்து 8.8.2024 தேதிய 'தினத்தந்தி' தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:



தலையங்கம்

தினத்தந்தி

8.8.2024 (வியாழக்கிழமை)

மருத்துவ காப்பீட்டுக்கு ஜி.எஸ்.டி.யா?

இந்தியாவின் வரிவிதிப்பில் ஜி.எஸ்.டி. என்று கூறப்படும் சரக்கு மற்றும் சேவைவரி ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. விற்பனை வரி, கூட்டு மதிப்பு வரி, கலால் வரி, நுழைவு வரி, சொகுசு வரி, கொள்முதல் வரி என்று பல பெயர்களில் வசூலிக்கப்பட்டு வந்த பல வரிகளை ஒருங்கிணைத்து ஒரே வரியாக வசூலிக்கவேண்டும் என்ற முடிவின் அடிப்படையில்தான், நாடு முழுவதும் ஜி.எஸ்.டி. கொண்டு வரப்பட்டது. 2017ம் ஆண்டு ஜீன் மாதம் 30ந்தேதி நள்ளிரவில் நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் இந்த ஜி.எஸ்.டி.யை அறிமுகப்படுத்துவதற்காக 4 மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டன. உடனடியாக ஜனாதிபதியின் ஒப்புதலும் பெறப்பட்டு, ஜீலை 1ந்தேதி முதல் நடைமுறைக்கும் வந்துவிட்டது. 3, 5, 12, 18, 28 என்ற 5 சதவீதங்களின் அடிப்படையில் ஜி.எஸ்.டி வசூலிக்கப்படுகிறது. உடலுக்கு கேடு விளைவிக்கும் பான் மசாலா,

புகையிலை பொருட்கள் உள்பட பல பொருட்களுக்கு 28 சதவீத வரிக்கு மேலாக மேல்வரியும், கூடுதல் வரியும் வசூலிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் மாதத்துக்கு ரூ.1 லட்சம் கோடி இந்த வரியின்கீழ் வசூலிக்கவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அடைந்து சாதனை படைக்கப் பட்டுள்ளது. அதற்கு பிறகு ரூ.1 லட்சம் கோடிக்கு மேல் வசூலாகி பெரும் சாதனை படைக்கப்பட்டு வருகிறது.

கடந்த நிதி ஆண்டில் மட்டும் ரூ.20.18 லட்சம் கோடி வசூலிக்கப்பட்டது. கடந்த மாதம் மட்டும் ரூ.1 லட்சத்து 65 ஆயிரத்து 17 ஆயிரம் கோடி வசூலிக்கப்பட்டது. ஜி.எஸ்.டி வசூல் நமது நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியின் அளவுகோலாக மதிப்பிடப்படுகிறது. இந்தநிலையில் பல பொருட்களுக்கான வரிவிகிதத்தை குறைக்க வேண்டும், 5 விகிதங்களில் இருக்கும் வரியை 3 அல்லது 4 விகிதங்களில் வசூலிக்க வேண்டும் என்று கடந்த சில ஆண்டுகளாகவே பலதரப்பட்ட பிரிவின ரிடம் இருந்து வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. குறிப்பாக 12 சதவீதத்தையும், 18 சதவீதத்தையும் ஒருங்கிணைத்து 15 சதவீதமாக்க வேண்டும் என்றும், சில பொருட்களுக்கும், சேவைக்கும் வரியை ரத்துசெய்ய வேண்டும் அல்லது குறைக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

அந்தவரிசையில் மருத்துவ காப்பீட்டு பிரீமியத்துக்கு இப்போது வசூலிக்கப்படும் 18 சதவீத ஜி.எஸ்.டி.யை ரத்து செய்யவேண்டும் என்று நாடு முழுவதும் குரல் எழும்பியுள்ளது. மத்திய சாலைப் போக்குவரத்து மந்திரி நிதின்கட்கரி கூட, நிதி மந்திரிக்கு, 'இந்த மருத்துவ காப்பீட்டுக்கான ஜி.எஸ்.டி.யை திரும்பப்பெற வேண்டும்' என்று கடிதம் எழுதியிருக்கிறார். எதிர்க்கட்சிகளும் இந்த கோரிக்கையை வலியுறுத்தி நாடாளுமன்றத்துக்கு முன்பாக ராகுல்காந்தி தலைமையில் ஆர்ப்பாட்டமும் நடத்தியிருக்கிறது.

ராகுல்காந்தி தன் சமூகவலைவளத்தில், 'ஒவ்வொரு பைசாவையும் சேமித்து மருத்துவக் காப்பீட்டு பிரீமி யத்தை செலுத்தும் இந்தியர்களின் சேமிப்பில் இருந்து ரூ.24 ஆயிரம் கோடியை மோடி அரசு வசூலித்துள்ளது' என்று கூறி யுள்ளார்.

மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பொதுவாக ஏழை, நடுத்தர மக்கள்தான் தங்கள் மருத்துவச் செலவை சரிக்கட்ட இணைகிறார்கள். இதற்கான பிரீமியத்தை அவர்கள் தங்கள் வருமானத்தில் இருந்து வாயைக்கட்டி, வயிற்றைக் கட்டி சேமிக்கிறார்கள். அவ்வாறு மருத்துவச் செலவுக்காக சேமிக்கும் பணத்தைக் கொண்டு கட்டும் பிரீமியத்துக்கு இவ்வாறு 18 சதவீதம் ஜி.எஸ்.டி. போடுவது ஏற்புடையது அல்ல. அனைவரின் கோரிக்கையையும் ஏற்று இந்த வரியை மத்திய அரசாங்கம் ரத்துசெய்ய வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட

# பேரழிவை தேசிய பேரிடராக ஒன்றிய அரசு அறிவிக்க வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக 9-

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்டுள்ள பேரழிவை தேசியப் பேரிடராக அறிவித்துத் தாராள உதவிக் கரத்தை ஒன்றிய அரசு நீட்ட வேண்டும். இயற்கைப் பேரிடரில் கூட அரசியல் பார்வை தேவையற்றது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கேரளத்தின் வயநாடு பகுதியில் கடந்த மாதம் 30ஆம் தேதி நிகழ்ந்த நிலச்சரிவு காரணமாக ஏற்பட்ட மனித பலி என்ற கொடூரம் இதுவரை கணக்கிட்டபடி 408 பேர்களாக உயர்ந்துள்ள செய்தி, மனித இதயம் உள்ள எவரது நெஞ்சத்தையும் பிழிவதாகும்!

இன்னும் தேடும்பணி தொடர்ந்த வண்ணம் உள்ளது; பாதிக்கப்பட்டோர், மீட்கப்பட்டவர்கள் கூறும் நிகழ்வுகள் இரத்தக் கண்ணீர் ஓடும் துன்பவியல் சோகப்படலமாக உள்ளது!

அடர்ந்த காடுகள் உள்ள பகுதியில் இன்னமும் மனித உடல்களைத் தேடும் பணி தொடர்ந்த வண்ணம் உள்ளது!

**''உடுக்கை இழந்தவன் கைபோல்'' தி.மு.க. அரசு செய்த உதவி**

தி.மு.க. அரசு, "உடுக்கை இழந்தவன் கைபோல்'' உடனே முன்வந்து கேரள மக்களின் துயரத்தில் பங்கு கொண்டு, 5 கோடி ரூபாய் நிதி உதவியை நமது திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் மூலம் காசோலை அனுப்பி, அம்மக்களின் துயரத்தில் பங்கு கொண்டு ஆற்றுப்படுத்தினார்.

அப்பகுதியில் எம்.பி.யாக இருந்தவரும், இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி அவர்களும், மற்ற அனைத்து தலைவர்களும் கேரள அரசுக்கும், அம்மாநில மக்கள் அடைந்த துன்ப துயரங்களுக்கும் ஆறுதல் கூறினர்; ஒத்தறிவு உணர்வை (Empathy) வெளிப்படுத்தி ஆற்றுப்படுத்தி வருகின்றனர்!

**தேசிய பேரிடர் என்று அறிவிக்கப்பட வேண்டும்**

தேசிய பேரிடர் (National Distress) என்று இதை உடனடியாக பிரகடனப்படுத்தி, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து, பாதிக்கப்பட்ட மக்கள், இழப்புகளை சந்தித்து - அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீருடன் உள்ளவர்களது மறுவாழ்வுக்கு உதவிட வேண்டியது ஒன்றிய அரசின் மனிதநேய - மகத்தானதொரு கடமையாகும்!

இராணுவத்தின் தொண்டும், அதிவேக நிவாரணப் பணிகளும், தொடர்பற்ற இடங்களுக்குப் பாலம் அமைத்தது உள்பட மிகவும் சிறப்பானவையாகும். பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளன.

என்றாலும் இனியும் தாமதிக்காமல் தேசிய பேரிடர் என்று அறிவித்து - தாராளமாக நிதியை ஒன்றிய அரசு உடனடியாக வாரி வழங்கிடுவது அவசரம் - அவசியம்!

**அரசியல் கண்ணோட்டம் கூடாது!**

இதில் அரசியல் கண்ணோட்டம் தேவையே இல்லை; மனிதாபிமானமும், மனசாட்சி கொல்லப்படாது அதிவிரைவு செயற்பாடுகள் மூலமும் தான் நிலைகுலைந்து திடீர் அனாதைகளாக்கப்பட்ட அம்மக்களுக்கு மிகப் பெரிய ஆறுதலளித்துப் புது வாழ்வைத் தரக் கூடும்.

எதிர்க்கட்சித் தலைவர், பல கட்சித் தலைவர்கள் விடுக்கும் வேண்டுகோளை ஒன்றிய அரசும், அதன் பிரதமர் மோடி அவர்களும் அலட்சியப்படுத்தக் கூடாது!



**தேசிய பேரிடர் என்பதில் உள்ள தேசியம் என்பதன் பொருள் என்ன?**

நடைபெறுவது மக்களாட்சி; அது மக்களுக்காக, மக்களின் நலனுக்காக நடைபெறும் அரசமைப்புச் சட்டப்படி உள்ள ஜனநாயகக் குடியரசாகும்.

எனவே திடீர் இயற்கைச் சீற்றங்களில் மக்களைக் காப்பாற்றிட, மீண்டும் இப்படிப்பட்ட அவலங்கள் நடைபெறாத வண்ணம், தொலைநோக்குத் திட்டங்கள், உடனடி நிவாரணம் என்ற பல கோணங்களில் அம்மாநில அரசு சற்றும் தாமதிக்காமல், உதவிட முன்வர வேண்டும்.

தேசிய ஒருமைப்பாட்டின் உண்மையான தத்துவத்தின் உட்பொருள் என்ன?

தேசிய பேரிடர் என்ற பெயரில் 'தேசியம்' என்ற சொல் இடம் பெற்றதன் அடி நீரோட்டம் என்ன?

பாரபட்சக் கண்ணோட்டமின்றி, பாதிப்பை மட்டுமே கணக்கிலெடுத்து அரசியல் உணர்வுகளை ஒதுக்கி, பொது நிலையோடு நாம் நம்முடைய மக்களுக்குத் தான் உதவுகிறோம் என்ற வானம் போல் விரிந்த மனப்பாங்குடன் ஒன்றிய அரசு விரைந்தோடி ஆறுதல் கூறுவதுடன், மீட்புப் பணிகள் - தடுப்புப்பணிகள் முதலியவற்றினை போர்க்கால அடிப்படையில் செய்து முடிக்க 'உதவாதினி தாமதம் உடனே வந்து உதவுக' என்ற அம்மக்களின், அம்மாநில அரசு விடுக்கின்ற அனைத்துக் கட்சி தலைவர்களின் ஒன்றுபட்ட உறுதிமிக்க வேண்டுகோளை உடனே நிறைவேற்ற, மனிதம் காக்கப்பட மக்கள் சேவைதான் இப்போதைய உடனடி தேவை என ஒன்றிய அரசு விரைந்து செய்க!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் - முன்னாள் எம்.எல்.ஏ.

# வி.சி.சந்திரகுமார் தாயார் சொ.சம்பூர்ணம் அம்மாள் மறைவு!

## கழகத்தினர் - பொதுமக்கள் அஞ்சலி!

ஈரோடு, ஆக. 9 -

கழக கொள்கை பரப்பு இணை செயலாளரும், ஈரோடு கிழக்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான வி.சி.சந்திரகுமார் தாயார் சொ.சம்பூர்ணம் அம்மாள், (வயது 80) நேற்று ( 8.8.2024 - வியாழக்கிழமை) காலை 6.30 மணியளவில் ஈரோடு கிராமடை 2வது வீதி, சூரம்பட்டி தபால் நிலையம் அருகில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாருக்கு வி.சி.சந்திரகுமார், சி.கதிர்வேல் என்கிற 2 மகன்களும், கஸ்தூரி என்ற ஒரு மகளும் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்து மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அனைத்துக் கட்சி பிரமுகர்கள், உள்ளாட்சி, அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதி சடங்கு நேற்று (8.8.2024 - வியாழக்கிழமை) மாலை 7 மணியளவில் ஈரோடு காவிரி கரையில் உள்ள ஆத்மா மின் மயானத்தில் நடைபெற்றது.

### எம்.ரூபன் தலைமை! நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை! தினகரன் சண்முகம் ஏற்பாட்டில்

# மதுரவாயலில் ஆலப்பாக்கம் கு.சண்முகம் முதலாமாண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## 2000 பேருக்கு காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. உணவு வழங்கினார்!

மதுரவாயல், ஆக.9

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி 146-வது வட்டத்தில், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுபிரமணியன் வழிகாட்டுதலின்படி வட்டக் கழக செயலாளர் மதுரவாயல் எம்.ரூபன் தலைமையில். மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர், வளசரவாக்கம் மண்டல குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் மாவட்ட தகவல் தொழில் நுட்பஅணியின் துணை ஒருங்கிணைப்பாளர் தினகரன் சண்முகம் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் 146-வது வார்டு மாமன்ற முன்னாள் உறுப்பினர் தலைமை செயற்குழு முன்னாள் உறுப்பினருமான ஆலப்பாக்கம்கு.சண்முகம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 2000 நபர்களுக்கு அறுசுவையுடன் கூடிய உணவு வழங்கப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும், மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு திருவுருவ படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு உணவு வழங்கினார்.

அயப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் வில்லிவாக்கம் ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் அ. ம.துரை வீரமணி, வட்டக் கழக செயலாளர்கள், எஸ்.ஜி. மாதவன், ப.ஆலன் எம்.கே.பி.அண்ணா தாசன், எம்.இ.ஸ்டாலின், எம்.சி, எம்.எம். ஜெயரத்தினம், சி.சசிகுமார், சி.சுந்தர், எஸ்.ரமேஷ் ராஜ், தி.சார்லஸ், மாமன்ற உறுப்பினர்கள் ஆ.மாலினி, ரமணி மாதவன், எஸ்.பாரதி அண்ணாவேலன், பாலவேடு சிவானந்தம், ராமாபுரம் வி.ராஜேஷ், கு. அருள், ஆர்.கர்ணல், தி. பாலாஜி, பி. சங்கர்,க. பிருந்தாவனன், ஆர்.ரசூல்தீன் , ச.எழிலரசு, எம்.ஆர். சதீஷ் கே குணசேகர், மற்றும் பகுதிகளாக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. ஆலோசனைப்படி, 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டில் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதிக் கழகச் செயலாளர் ச. பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் கலந்து கொண்டு அறுசுவை உணவினை வழங்கினர். உடன் 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை, பகுதி துணைச் செயலாளர் கே.பி. சுரேந்தர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு மன்ற நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கோ. செங்குட்டுவன்

### ஆகஸ்ட் 9 (1996)



பள்ளிப்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையினால் கவரப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சென்னை மாவட்டக் கழக துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, மாநகராட்சி மன்றத்தை கழகம் கைப்பற்றியபோது, தலைவர் கலைஞர் அவர்களுக்கு துணையாக இருந்து உழைத்தவர். அதற்காக அறிஞர் அண்ணா அவர்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றவர்.

சென்னை மாவட்ட தி.மு.க. மூன்றாவது மாநாடு 1959ல் நடைபெற்றபோது, அம்மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்து, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியவர்.

கறுப்புக் கொடி, இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**